

முரசொலி செல்வம் அவர்களின் நினைவு நாளில், கழகத் தலைவர் மு.க.ஸ்டரின் அவர்கள், சென்னை – கோபாலபுரத்தில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் இல்லத்தில் உள்ள திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு எம்.எல்.ஏ., பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர்கள் ரிஷிவந்தியம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., உளுந்தூர் பேட்டை எம்.எல்.ஏ., ஜி.வசந்தவேலு, புலவர் முத்து வாவாசி ஆகியோர் உடன் உள்ளார்கள்.

தி.மு.க., தோல்வியில் வெற்றி! த.வெ.க., வெற்றியில் தோல்வி!

இடைத் தேர்தல் முடிவுகள் குறித்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

சென்னை, அக்.12- முரசொலி செல்வம் அவர்களின் 2ஆம் நினைவு நாளான நேற்று, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை 'முரசொலி' அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது செய்தியாளர்கள் இடைத்தேர்தல் முடிவு குறித்து தொடுத்த வினாவிற்குப் பதிலளித்த கழகத் தலைவர் அவர்கள்; தி.மு.க.வைப் பொறுத்தவரை தோல்வியில் வெற்றியடைந்துள்ளது. த.வெ.க. வெற்றியில் தோல்வி அடைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் அவர்கள் கூறியதாவது:-

"மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் முடிவு குறித்து ஏற்கனவே தாம் விரிவாக அறிக்கை வெளியிட்டிருக்கிறேன். ஒரே வார்த்தையில் கூறவேண்டும் என்றால், தி.மு.க.வைப் பொறுத்தவரை தோல்வியில் வெற்றியடைந்துள்ளது; அதேநேரம், த.வெ.க. வெற்றியில் தோல்வியடைந்துள்ளது!" இதுவே எனது கருத்து.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் கழக கலை – இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு தனது பிறந்தநாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உள்ளார்.

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. வேண்டுகோள்!

சேலம், அக்.12- சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் 14-10-2026 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தள பதி மு.க.ஸ்டாலின் அறி வாலயம் கலைஞர் அரங் கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணா நிதி அவர்களின் தலைமை யில் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் தலை மைக் கழகப் பிரதிநிதி களான, கழக சட்டத்திட் டத் திருத்தக்குழு செயலா ளர் வழக்கறிஞர் இரா.கிரி ராஜன்,MP மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செய லாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமை கழக செயற் குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர் கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணி அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் தவ றாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 22.08.2026 அன்று அண்ணா அறிவால யத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழுக்கூட் டத்தில் கழக நிர்வாக மறுசீ ரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, கழகம் மறுசீ ரமைப்பு குறித்து,

கழக வளர்ச்சி பணிகள்

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.



முரசொலி செல்வம் அவர்களின் நினைவு நாள் திருவாரூர் கலைஞரின் இல்லத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. அது சமயம் தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர், இரா. சங்கர், வர்த்தக அணி மு.செயலாளர் டி.எஸ்.எம். முத்துக்குமரசாமி, மாநில, இசை வேளா ளர் சங்க துணைத் தலைவர் சோமாஸ்கந்தன், ஒய்வுபெற்ற இணை ஆணையர் கஜேந்திரன், ஒய்வுபெற்ற வட்டாச்சியர் கலைச்செல்வன், ஐஸ்வர்யா சீனு மற்றும் பலர் கலந்து கொண்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

மண்ணை விட்டு மறைந்தாலும் என் மனதை விட்டு அகலாத – பேரன்பிற்குரிய

செல்வம் அண்ணனின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்!

நினைவு நாளில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

சென்னை, அக். 12- முரசொலி செல்வம் அவர்களின் நினைவுநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், "மண்ணை விட்டு மறைந்தாலும் என் மனதை விட்டு அகலாத பேரன்புக்குரிய செல்வம் அண்ணன் அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"என் வாழ்வில் கிடைத்தற்கரிய பெருஞ்செல்வமாக நான் பெற்றிருந்த அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் நினைவு நாள்.

தலைவர் கலைஞரே அவருக்குப் பெயர்சூட்டி, தாயைப் போல வளர்த்தெடுத்தார். கலைஞரின் நிழலில் வளர்ந்த செல்வம் அவர்கள் கழகப் பணி செய்வதைத் தவிர வேறு எதுவும் அறியாதவர், எதையும் நாடாதவர்.

செல்வம் அவர்கள் எனக்கு அண்ணனாகவும் இருந்திருக்கிறார், ஆசானாகவும் இருந்திருக்கிறார், நெருக்கடியான நேரங்களில் ஆறுதலாகவும் இருந்திருக்கிறார்.

மண்ணைவிட்டு மறைந்தாலும் என் மனதைவிட்டு அகலாத பேரன்புக்குரிய செல்வம் அண்ணன் அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று அவரது இல்லத்தில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., தமது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பி.கே.சேகர்பாபுவின் துணைவியார் திருமதி சாந்தி, புதல்வர் விக்னேஷ் ஆகியோர் உள்ளார்கள்.

தலைமைக் கழகப் பிரதிநிதிகள் இரா.கிரிராஜன் எம்.பி.– அழகிரி சதாசிவம் முன்னிலை!

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம் 14.10.2026 புதன்கிழமை மதியம் 3.00 மணியளவில், சங்ககிரி பவானி மெயின் ரோட்டில் உள்ள, ஸ்ரீ வாசுதேவ் மஹால் திரு மண மண்டபத்தில்", மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில், தலை மைக் கழகப் பிரதிநிதிகள் இரா.கிரிராஜன், எம்.பி.- அழகிரி சதாசிவம் முன்னிலையில் நடை பெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர் வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பி னர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி புதிய நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளை கழக மறுசீரமைப்பு குறித்து.

கழக ஆக்கப்பணிகள் குறித்து.

டி.எம்.செல்வகணபதி
சேலம் நாடாளுமன்ற உறுப்பினர்,
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.செயலாளர்.



வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விளாத்திகுளம் பேரூராட்சிக்குட்பட்ட 3வது வார்டு மதுரை ரோட்டில் கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்யும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணியை துரிதபடுத்துவதற்கு அறிவுறுத்தினார்.உடன் விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் சுப்பிரமணியன், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் கூர்யா அய்யன்ராஜ், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், உள்ளிட்டர் உடன் இருந்தனர்.